# அரக்கோணம் நகராட்சி
# சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.32 நாள். 08.07.2024.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 12.07.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

ooOoo

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 12.07.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் : 08.07.2024.

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2024, ஏப்ரல் 2024, மே 2024 மற்றும் ஜீன் 2024–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.520 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

அரக்கோணம் நகராட்சியின் 2023–24–க்கான நிர்வாக அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.521 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (**Outsourcing**) 14 தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு, மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் .3006.2024 வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி நீட்டிப்பு காலம் 30.06.2024 அன்று முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு காலத்தை 01.07.2024 முதல் 30.09.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் அந்நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.3.50 இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுதிக்கலாம்.
பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.483/2023/எச்1)

**தீர்மானம் எண்.522 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்தவும் மற்றும் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தளவாடச்சாமன்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.2.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்.510/எச்1/2024)**

**தீர்மானம் எண்.523 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 5</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு தற்போது வருகின்ற மழைக்காலத்தில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மழைச்சட்டை (Rain Coat) தேவைப்படுவதை கருத்தில் கொண்டு தூய்மை பணியாளர்கள் – 89 மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் –4 எண்ணிக்கை என மொத்தம் 93 எண்ணிக்கையில் மழைச்சட்டை வாங்கி வழங்க தோராய செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்.510/எச்1/2024)**

**தீர்மானம் எண்.524** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 6</u>

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ள கலன்கள், தேவையற்ற டயர்கள், உடைந்த பொருட்கள் அப்புறப்படுத்துதல் மேலும் தண்ணீர் தேக்கி வைக்க கூடிய கலன்கள், கீழ்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொசு புழுக்கள் உருவாகாமல் தடுக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும், மேலும் காய்ச்சல் கண்ட நபர்களின் விவரங்களை சேகரித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் செப்டம்பர்–2023 முதல் மார்ச்–2024 வரை முடிய 18 நபர்கள் களப்பணியாளர்களை (DBC) மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரர் மூலமாக பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி ஒப்பந்ததாரர் M/S ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு நகர மன்ற தீர்மானம் எண்.490 நாள்.14.02.2024ல் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

20.06.2024 அன்று மாவட்ட ஆட்சித்தவைர், இராணிப்பேட்டை அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற பொது சுகாதாரம் மாவட்ட நலச்சங்கம் செயற்குழு கூட்டத்தில் இந்நகராட்சியில் கொசு புழு தடுப்பு பணிக்கு களப்பணியாளர்களை **(DBC)** உடனடியாக நியமிக்கும்படி அறிவுரைத்தப்பட்டதை தொடர்ந்து பொது சுகாதார நலன் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் **18.07.2024** முதல் **17.10.2024** வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே 18 பணியாளர்களை கொண்டு பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் **ரூ.**6,50,000/–க்க நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

(ந.க.எண்.1245/2022/எச்1)

**தீர்மானம் எண்.525** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 7</u>

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணம் நகராட்சி பொது மக்களுக்கு வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்தி ஆகாமல் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான Temiphos Emulsifiable 50% EC 100 லிட்டர் தேவைப்படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற பேராமௌன்ட் பெஸ்டிசைட்ஸ் லிமிடெட்

அவர்களிடம் கொள்முதல் செய்ய அதற்கான செலவினம் ரூ.70000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

(ந.க.எண்.1030/2023/எச்1)

**தீர்மானம் எண்.526** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 8</u>

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், ரூ.508.18 இலட்சம் மதிப்பீட்டில் (ஒரு வருடத்திற்கு) வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில், வார்டு எண்.01 முதல் 36 வரையில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.03.2023 அன்று கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்திட நகர மன்ற தீர்மான எண். 391 நாள்.18.05.2023-ல் மன்ற அனுமதி வ்ழுங்கப்பட்டு, 15.06.2023 முதல் 14.06.2024 வரை ஒரு ஆண்டிற்கு மட்டும் பணி உத்தரவு வழுங்கப்பட்டுள்ளது.

மேலும் நகர மன்ற தீர்மான எண்.288 நாள்.19.01.2023ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பணிகள் திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாமண்டிற்கான பணியினை நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் முதலாமண்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட 15.06.2023 முதல் 14.06.2024 வரை காலத்தில் திடக்கழிவு தொடர்பான பணிகளில் சுணக்கமின்றி நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏதும் வராத வண்ணம் பணி செய்துள்ளதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு 15.06.2024 முதல் 14.09.2024 வரையுள்ள மூன்று மாதத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினம் ரூ.127.02 இலட்சம் மதிப்பீட்டில் (மூன்று மாதத்திற்கு) பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.2682/2022/எச்1)**

**தீர்மானம் எண்.527** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 – ன் படி அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதார பாதுகாப்பு வழங்கும் பொருட்டும் ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 159, நாள்02 ..11.2015-இல் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்தல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது .அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து , ) அடையாள அட்டை மற்றும் வியாபார சான்றுVending Certificate .வழங்கப்பட்டது (தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள். (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன் விதி 11-ன் கீழ் நியமனம் மற்றும் தேர்தல் முறையில் உறுப்பினர்கள் நியமித்து நகர விற்பனைக் குழு செயல்பட்டு வந்தது மேற்படி விதிகளின்படி .நகர விற்பனைக் குழுவிற்கான ஐந்தாண்டு காலம் முடிவடைந்து விட்டபடியாலும் தற்போதைய நிலையில் ,சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து )Town Vending Committee புதிய (நகர விற்பனைக் குழு ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர்சென்னை அவர்களின் கடிதம் எண் ,

20789/2021/UPA:நாள் ,07.06.2024 தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது இதற்கிணங்க . தற்போது மீண்டும் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 525 எண்ணிக்கையிலான நபர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் மற்றும் வியாபார சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது சாலையோர வியாபாரிகளுக்கான உறுப்பினர் தேர்தல் நடத்திட கீழ்கண்டுள்ளவாறு இடஒதுக்கீடு முறையினை பின்பற்றி நடப்பில் உள்ள சாலையோர வியாபாரிகளில் இருந்து தேர்தல் நடத்தி நகர விற்பனைக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

<u>உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்டோர் | 1– எண்ணிக்கை |
| 2. | மகளிர் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 3. | மாற்றுத் திறனாளிகள் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 4. | சிறுபான்மையினர் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| .5 | பொது / பிற வகுப்பினர் | 2– எண்ணிக்கை |
| | **மொத்தம்** | 6 |

இதன்படி தேர்தல் நடத்திட தேர்தல் அறிவிக்கையினை தினசரி செய்தி தாளில் வெளியிடுதல்வாக்கு சீட்டுகள் அச்சடித்தல் மற்றும் தேர்தல் நடைமுறைகள் செயல்படுத்துதல் , . இதற்கான தோராய செலவீனம் ரூபாய் .உள்ளிட்ட பணிகள் செய்ய வேண்டியுள்ளது1.50 இலட்சம் தேவை உள்ளது .

இதனை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும்மேற்கூறியவாறு , சட்டவ ிதிகளின்படி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு.</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(நஎண்.க.. 1620/2016/எப்1)

**தீர்மானம் எண்.528** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

இந்நகராட்சியில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வாகன முன்பணம் மற்றும் கணினி முன்பணம் வழங்க கோரி விண்ணப்பம் செய்துள்ளார்கள். விண்ணப்பம் செய்துள்ள பணியாளர்களுக்கு முன்பணம் வழங்க 2024–2025ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) முன்பணம் பெறும் பணியாளரின் மாத ஊதியத்தில் அசல் (ம) வட்டியுடன் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0516/2022/பி3)

**தீர்மானம் எண்.529** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

அரக்கோணம் நகராட்சியில் 2024–2025 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய வருமான வரி (IT) பிடித்தம் ஜி.எஸ்.டி (GST) பிடித்தம் ஆகியவற்றை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து உரிய அரசு கணக்கில் தாக்கல் செய்யவும் 2023–2024 ஆண்டின் ஆண்டு கணக்குகள்

முடித்து தணிக்கைக்கு உட்படுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ 2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் .418/2023/பி1)

**தீர்மானம் எண்.530** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 12</u>

உள்ளாட்சி நிதி தணிக்கை ஆண்டு (2022-2023) பத்தி எண் (நிதி தணிக்கை) : 49 - யில் அரக்கோணம் நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டு தணிக்கை மேற்கொண்டதற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூபாய் 1,20,309 /- ஐ செலுத்துமாறு உதவி இயக்குனர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை வேலூர் அவர்களால் கூறப்பட்டுள்ளதால் இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மேற்படி தொகையினை அரசு தலைப்பில் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் .418/2023/பி1)

**தீர்மானம் எண்.531** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 13</u>

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரோற்று நிலையத்தில் பயன்படுத்தப்படும் 125 HP Fully Automatic ATS Starter 16.04.2024 அன்று பழுது ஏற்பட்டது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி பழுது ஏற்பட்டுள்ள 125 HP Fully Automatic ATS Starter-யை உடன் பழுது நீக்கம் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய R.சண்முகம், அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரரின் மூலம் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி பட்டியல் தொகை ரூ.2,16,000/- வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 845/2023/இ1)

**தீர்மானம் எண்.532** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 14</u>

மக்களவைக்கான பொதுத் தேர்தல் தொடர்பாக அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான 11 எண்ணிக்கை நகராட்சி பள்ளிகளில் உள்ள வாக்குச்சாவடி மையத்திற்கு தேவையான ஷாமியானா பந்தல் அமைக்கப்பட்டும், 3 வாக்குச்சாவடிகளுக்கு 6 தற்காலிக கழிப்பிடம் அமைக்கப்பதற்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரர்

திரு.C.பத்மநாபன், மூலம் பட்டியல் தொகை ரூ.88,000/– பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 1005/2023/இ1)

**தீர்மானம் எண்.533** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 15**

மக்களவைக்கான பொதுத் தேர்தல் தொடர்பாக அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான 11 எண்ணிக்கை நகராட்சி பள்ளிகளில் வாக்குச்சாவடி மையத்திற்கு தேவையான குடிநீர் வசதி மற்றும் எலக்ட்ரிக்கல் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய C.பத்மநாபன், அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரரின் மூலம் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)–ன்படி பட்டியல் தொகை ரூ.76,000/– கல்விநிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 1005/2023/இ1)

**தீர்மானம் எண்.534** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 16**

அரக்கோணம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.32 அரசு கட்டடமான அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியர், அலுவலகத்திற்கு பிரதான பைப்லைன் அமைத்து குடிநீர் இணைப்பு வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் மக்களவைக்கான பொதுத் தேர்தல் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது. எனவே கோடை கால குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதியும், மக்களவை பொதுத் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதியும், உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.C.பத்மநாபன், அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரரின் மூலம் மேற்படி பணியினை செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவினத்தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)–ன்படி பட்டியல் தொகை ரூ.30,498/– வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.247/2024/இ1)

**தீர்மானம் எண்.535** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 17**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நடுநிலைப் பள்ளியில் தற்காலிக ICDS கட்டிடம் கட்டுவதற்கு பள்ளி மாணவ மாணவியரின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும், உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.C.பத்மநாபன், அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரரின் மூலம் மேற்படி பணியினை செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவினத்தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)–ன்படி பட்டியல் தொகை

ரூ.1,05,597/- கல்விநிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 465/இ1/2024)

**தீர்மானம் எண்.536** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 18**

அரக்கோணம் நகராட்சிக்கு 2023-24 ஆம் ஆண்டுக்கு Swachh Bharat Mission (Urban) 2.0 6th & 7th SHPC திட்டத்தின்கீழ் பொதுகழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடம் அமைக்க கீழ்காணும் பணிக்கு 10.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த சத விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சதவீதம் |
| | SBM (Urban) 2.0 (6Th SHPC) | | | | | |
| 1 | வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில் புதியதாக பொதுகழிப்பிடம் கட்டும் பணி. | 31.28 | **K.கிரிதரன்** | - 0.01 % மதிப்பீட்டை விட குறைவு | **C.பத்மநாபன்** | 0.02 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 22 கோளிங்கர் ரோடு ஸ்டேட்பேங் அருகில் பொதுகழிப்பிடம் கட்டும் பணி | 31.28 | **V.N.சதீஷ்** | 6.62 % மதிப்பீட்டை விட அதிகம் | **T.S.அருண் குமார்** | 6.65% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண்.28 சோமசுந்தரம் நகரில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி. | 31.50 | **V.N.சதீஷ்** | 7.77 % மதிப்பீட்டை விட அதிகம் | **T.S.அருண் குமார்** | 7.80% மதிப்பீட்டை விட அதிகம் |
| | SBM (Urban) 2.0 (7Th SHPC) | | | | | |
| 4 | வார்டு எண்.13 பழைய பேருந்து நிலைய பகுதியில் அம்மா உணவகம் அருகில் பொதுகழிப்பிடம் கட்டும் பணி. | 30.00 | **K.ஸ்ரீநாத்** | - 0.10 % மதிப்பீட்டை விட குறைவு | **S.ரமேஷ்பாபு** | 0.40 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | எண்.24 பழனிப்பேட்டை, பகுதியில் (கோயில் அருகில் அங்காளம்மன்) புதியதாக பொதுகழிப்பிடம் கட்டும் .பணி | 30.00 | **K.ஸ்ரீநாத்** | – 0.10 % மதிப்பீட்டை விட குறைவு | **S.ரமேஷ்பாபு** | 0.33 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | எண்.02 ஜெய்பீம் நகர் பகுதியில் புதியதாக பொதுகழிப்பிடம் கட்டும் பணி. | 24.00 | – | – | **P.மனோகர் பிரபு** | 10.96 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2 மற்றும் 3–க்கான வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. மேலும் வரிசை எண். 6–க்கான வரப்பெற்ற ஒரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளியும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது.

மேற்படி வரிசை எண்.2, 3 மற்றும் 6–க்கான ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு **Negotiation** கோரியதன் பேரில் கீழ்காணும் **விவரப்படி** விலை விகிதத்தினை **குறைத்து** பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

| **பணியின் வரிசை எண்.** | **ஒப்பந்ததாரர்** | **மதிப்பட்டை விட அதிகம்,** | **குறைத்து தர ஒப்புதல் அளித்தது** | **தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம்** |
|---|---|---|---|---|
| 2 | V.N.சதீஷ் | 6.62 % | 0.00 % (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு) | – |
| 3 | V.N.சதீஷ் | 7.77 % | 0.00 % (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு) | – |
| 6 | P.மனோகர் பிரபு | 10.96 % | 0.00 % (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு) | – |

மேற்காணும் வரப்பெற்ற வரிசை எண்1 .முதல் 6 வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்து வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளியை எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.899/2023/இ1)**

**தீர்மானம் எண்.537** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 19</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு 2023–24 ஆம் ஆண்டுக்கு Swachh Bharat Mission (Urban) 2.0 7th SHPC திட்டத்தின்கீழ் பொதுகழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடம் அமைக்க கீழ்காணும் பணிக்கு 18.06.2024 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த சத விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சதவீதம் |
| SBM (Urban) 2.0 ($7^{Th}$ SHPC) | | | | | | |
| 1 | வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில் புதிய சிறுநீர்கழிப்பறை கட்டும் பணி. | 1.28 | **C.பத்மநாபன்** | 0.00 % மதிப்பீட்டு விகிதம் | **K.கிரிதரன்** | 0.06 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்.14 பழைய பேருந்து நிலையத்தில் புதிய சிறுநீர்கழிப்பறை கட்டும் பணி. | 1.28 | **C.பத்மநாபன்** | 0.00 % மதிப்பீ விகிதம் | **K.கிரிதரன்** | 0.06 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண்.22 சோளிங்கர் ரோடு புதிய சிறுநீர்கழிப்பறை கட்டும் பணி. | 1.28 | **C.பத்மநாபன்** | 0.00 % மதிப்பீட்டு விகிதம் | **K.கிரிதரன்** | 0.06 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நம்ம டாய்லெட் மறுசீரமைப்பு செய்யும் பணி. | 3.50 | **C.பத்மநாபன்** | −0.07 % மதிப்பீட்டு விகிதம் | **K.கிரிதரன்** | 0.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண்.17 சுவால்பேட்டை காந்தி சாலையில் உள்ள நம்ம டாய்லெட் மறுசீரமைப்பு செய்யும் பணி. | 3.50 | **C.பத்மநாபன்** | −0.07 % மதிப்பீட்டு விகிதம் | **K.கிரிதரன்** | 0.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | வார்டு எண்.28 சத்தியவாணி முத்து நகரில் உள்ள சமுதாய கழிப்பிடம் மறுசீரமைப்பு செய்யும் பணி. | 3.50 | **C.பத்மநாபன்** | −0.07 % மதிப்பீட்டு விகிதம் | **K.கிரிதரன்** | 0.03 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற வரிசை எண்1 .முதல் 6 வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்து வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.899/2023/இ1)

**தீர்மானம் எண்.538** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 20</u>

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் மற்றும் அரக்கோணம் இரயில் நிலைய சந்திப்புக்கு (அரக்கோணம் நகராம் முக்கிய இரயில்வே சந்திப்பு) நாள் ஒன்றுக்கு சுமார் 30000 பயனிகளுக்கு மேல் இந்நகருக்குள் வந்து செல்கின்றனர். இப்பயனிகள் வந்து செல்ல ஏதுவாக அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில்

அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி அருகில் புதிய சைக்கிள் ஸ்டாண்டு (Bicycle stand) கட்டடம் அமைக்கும் பட்சத்தில், இந்நகர பொதுமக்களுக்கும் மற்றும் பயனிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைவதுடன் இந்நகராட்சிக்கும் அதன் மூலம் வருவாய் ஈட்டிகொடுக்கும். எனவே அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி அருகில் சைக்கிள் ஸ்டாண்டு (Bicycle stand) அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகையான ரூ.15.00 இலட்சத்தினை இந்நகராட்சி 2024−25 ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொதுமக்கள் மற்றும் பயனிகளின் நலன் கருதியும், நகராட்சியின் வருவாய் நலன் கருதியும், 2024−25 ஆண்டு வருவாய் நிதியின் கீழ் ரூ.15.00 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.123/2024/இ1)**

**தீர்மானம் எண்.539** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :− மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 21</u>**

இந்நகராட்சியில் 2024−25ம் ஆண்டுடிற்கு பொதுநிதி, மற்றும் குடிநீர்நிதியின் கீழ் 26.06.2024 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>2024−25ம் ஆண்டிற்கான தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணிகளை மேற்கொள்ள 9 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் பெற்று குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளுதல்.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.500 நாள் 28.02.2023)** | 15.00 | **R.சண்முகம்** | **−0.20%** | **C.பத்மநாபன்** | **0.61%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>2024–25ம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் பணியாற்ற 6 வால்வு ஆப்ரேட்டர்கள், 4 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் ஆகியோர் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணி ஆட்களை பெற்று குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளுதல்.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.501 நாள் 14.02.2024)** | 15.00 | **V.சதீஷ்குமார்** | **–0.20%** | **C.பத்மநாபன்** | **0.50%** |
| 3 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பகுதிகளில் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்புகளை (Leakage) சரிசெய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2024–25 ஆம் ஆண்டிற்கு பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.498 நாள் 14.02.2024)** | 5.00 | **C.ராஜகோபால்** | **–0.20%** | **C.பத்மநாபன்** | **0.50%** |

**அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் 3 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.123/2024/இ1)**

**தீர்மானம் எண்.540** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 22</u>**

இந்நகராட்சியில் 2024–25ம் ஆண்டுடிற்கு பொதுநிதி, மற்றும் குடிநீர்நிதியின் கீழ் 26.06.2024 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேலூர் கூட்டு குடிநீர் திட்டம், கல்லாறு மற்றும் தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரக்கோணம் நகருக்கு குடிநீர் பெறப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்திட குடிநீரில் சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 2024-25ஆம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவத்தினை விநியோகம் செய்யும் பணி.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.497 நாள் 14.02.2024)** | 15.00 | **ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் சென்னை** | -0.20% | **ஸ்ரீ ராஜ கணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சென்னை** | 0.50% |
| 2 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36வார்டுகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு, மற்றும் நகராட்சி பள்ளி கழிவறை மின்மாட்டார்களில் 2024-25 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.499 நாள் 14.02.2024)** | 15.00 | **C.பத்மநாபன்** | -0.21% | **R.சண்முகம்** | 0.50% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் கல்லாறு நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயக்கப்படும் மின்மோட்டார்களை 2024-25 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது பார்த்து இயக்கும் பணி.<br>**(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.496 நாள் 14.02.2024)** | 5.00 | **R.சண்முகம்** | **-0.10%** | **C.பத்மநாபன்** | **0.62%** |

**அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் 3 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.119/2024/இ1)**

**தீர்மானம் எண்.541 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 23</u>**

இந்நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-24 ஆம் ஆண்டின் கீழ் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் கீழ்காணும் பணிக்கு 31.05.2024 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்ட வார்டு எண்.31 புதுப்பேட்டை 3வது தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.50 | R.டில்லிபாபு | 0.41% | P.வீரராகவன் | 0.41% |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்ட வார்டு எண்.32 என்.வி.எண். 2வது தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.50 | R.டில்லிபாபு | 0.41% | P.வீரராகவன் | 0.41% |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.177/2024/இ1)**

**தீர்மானம் எண்.542 நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 24</u>

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் காரியமேடை கட்டங்களுக்கு காரிய நிகழ்ச்சி ஒன்றுக்கு நகராட்சி பராமரிப்பு கட்டணமாக ரூ.500/– வசூலித்துக்கொண்டு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **காரியமேடை அமைவிடம்** | **காரிய நிகழ்ச்சி ஒன்றுக்கு வசூலிக்கும் தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.03 கணேஷ் நகர் பகுதியில் உள்ள காரியமேடை. | 500 |
| 2 | வார்டு எண்.12 உப்புகுளம் சாவடி தெருவில் உள்ள காரியமேடை. | 500 |
| 3 | வார்டு எண்.24 ABM சர்ச் பகுதியில் உள்ள காரியமேடை | 500 |
| 4 | வார்டு எண்.26 T.N. நகர் 8வது தெரு, A.N.கண்டிகை பகுதியில் உள்ள காரியமேடை. | 500 |

**அலுவலக குறிப்பு:** நகராட்சியின் நிதிநிலைமை மற்றும் நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.543** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 25</u>

அரக்கோணம் நகராட்சி வார்டு எண் .3 கணேஷ் நகர். 2 வது குறுக்கு தெரு சர்வே வார்டு–B, பிளாக் – 39, நகரளவு எண் – 24 , பழைய சர்வே எண் 8/1C2A , 83/1 Part நகராட்சி சாலை இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுசாலைக்கு உரிமை கோரி திருமதி.**S.கலாவதி** அவர்களால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 80/2013 நகராட்சி ஆணையர்க்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்கு 29/4/2024 தேதிய மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தீர்ப்புரையில் மேற்படி தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.544** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 26</u>

மாண்பமை சென்னை உயர்நீதீமன்ற வழக்கு எண் WP.No.31096 of 2022, CRP No .612 of2023 மற்றும் SA No.156 of 2023 W.M.P.No.25266 of 2023 தீர்ப்புரை நாள் 12.04.2024 ல் கணேஷ் நகர் வார்டு –B, பிளாக் – 38, நகரளவு எண்– 37 பழைய நகரளவு என் 83/1 Part (இதன் பழைய சர்வே எண் 244/2 ) இதன் விஸ்தீரணம் 444 ச.மீ(4608. சதுரஅடி) கொண்ட பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தை ரிட் மனுவின் 2 வது பிரதிவாதியான அரக்கோணம் நகராட்சி ஆணையர் மேற்படி சொத்தை மீட்டெடுக்கவும் பூங்கா பகுதியாக பராமரிக்கவும் உத்தரவிடப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u> 1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2) மேற்படி தெரிவித்துள்ள பூங்கா இடத்தை Fencing அமைத்து பராமரிப்பு பணி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.545** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

அரக்கோணம் நகராட்சியின் மூலமாக வீட்டுமனைகள் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த அரசாணை எண் 980 நாள் 25.10.1982ல் மத்திய அரசினால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை வளர்ச்சியை செய்வதற்கான திட்டத்தின் கடன் வழங்கப்பட்டு கீழ்கண்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அரக்கோணம் தாலுக்கா, காவனூர் கிராம சர்வே எண். 328/2 –ல் 35.60 ஏக்கர் பரப்பளவுள்ள அரசாங்க புறம்போக்கு இடத்தினை நிலக்கிரயம் செலுத்தி அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டு, முதல் கட்டமாக (Phase –I) 483 மனைகள் வருவாய் பிரிவினருக்கு தகுந்தவாறு வடிவமைக்கப்பட்டு, உத்தேச விற்பனை விலை நிர்ணயம் செய்து மனைகளை குலுக்கல் முறையில் மனைகள் ஒதுக்கீடு செய்து மனையின் விற்பனை விலையில் 1/4 பங்கு தொகை முதல் தவணைத் தொகையாக செலுத்தியும் மீதியுள்ள தொகையினை வருவாய் பிரிவினருக்கு தகுந்தவாறு தவணை முறையில் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டு குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.8.00 வீதம் நிர்ணயம் செய்து மனைகள் ஒதுக்கீடு செய்யயப்பட்டது.

அதனை தொடர்ந்து தணிக்கையின் அறிவுரையின்படி 31.03.2002 வரை மேற்படி திட்டத்திற்கான செலவு தொகை கணக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே ஒரு சதுர அடிக்கு ரூ.8.00 நிர்ணயம் செய்தவர்களுக்கு கூடுதலாக ஒரு சதுர அடிக்கு 2.70 வீதம் ஆக மொத்தம் ஒரு சதுர அடிக்கு ரூ.10.70 என தொகை நிர்ணயம் செய்ய தமிழ்நாடு அரசு தலைமை கணக்காளர் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரப்படி ஒரு சதுர அடிக்கு ரூ.10.70/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை நகரமன்ற தீர்மான எண்.2952 நாள் 26.05.2006ல் அனுமதி பெறப்பட்டது. மிகுதி தொகையினை செலுத்த கோரி அனைத்து மனை ஒதுக்கீட்டார்களுக்கு 31.05.2006ல் அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்காணும் உத்தேசிக்கப்பட்ட தொகை ஒரு சதுர அடிக்கு ரூ.10.70/–வீதம் முழுத்தொகையும் செலுத்திய மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு பத்திர பதிவு செய்து தர 2 நீ இணை சார்பதிவாளர் அரக்கோணம் அலுவலகத்திற்கு 14.08.2007ல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2 நீ இணை சார்பதிவாளர், அரக்கோணம் அவர்களின் கடித ந,.க.எண்.519/2007 நாள் 22.08.2007ல் மேற்படி இடத்திற்கு வழிகாட்டுதல் மதிப்பீடு ரூ.0/– என உள்ளதாக தெரிவித்தும் மேற்படி இடத்தினை பத்திர பதிவு செய்ய இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி இடத்திற்கு வழிகாட்டு மதிப்பீடு நிர்ணயம் செய்து தர சார் பதிவாளரை அணுகியதற்கு 2 நீ இணை சார்பதிவாளர், அரக்கோணம் அவர்களின் கடித ந,.க.எண்.519/2007 நாள் 09.12.2009 தேதிய கடிதத்தில் மேற்படி இடத்திற்கு வழிகாட்டு மதிப்பீடு ஒரு சதுர அடிக்கு ரூ.46/– என நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது. எனவே ஒரு சதுர அடி ரூ.46/–என்ற வீதத்தில் தொகை செலுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் பத்திர பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து நிலுவை தொகை செலுத்த தவறிய நபர்களுக்கு நகரமன்ற தீர்மானம் எண்.1389 நாள் 28.01.2010ல் ஒப்புதல் பெற்று மேற்படி மனை

ஒதுக்கீட்டாளர்களுக்கு 30 நாட்களுக்குள் வழிகாட்டு மதிப்பீடு தொகையான ஒரு சதுர அடிக்கு ரூ.46/-யினை செலுத்தி பத்திரப்பதிவு செய்து மனையை பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் வழிகாட்டு மதிப்பீடு தொகையுடன் 17 % வட்டியுடன் கூடுதலாக செலுத்த நேரிடும் என அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே உரிய காலத்திற்குள் பணம் செலுத்தாதவர்களிடம் இருந்து வட்டி தொகையினை வசூலித்துக் கொள்ள நகரமன்ற தீர்மானம் 1975 நாள் 16.09.2011-ல் ஒப்புதல் பெற்று மேற்காணும் விவரப்படி நிலுவை தொகைகள் வசூல் செய்து கொண்டு இதுவரை மொத்தம் 122 மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு பத்திர பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

2 நீ இணை சார்பதிவாளர் அரக்கோணம் அவர்களின் ந.க.எண்.80/2012 நாள் 10.04.2012 தேதிய கடிதத்தில் ஒரு சதுர அடிக்கு ரூ.100/-என தெரிவிக்கப்பட்டது. ஆகவே ஒரு சதுர அடிக்கு ரூ.100/- வசூலித்து கொள்ளவும், 01.04.2012 தேதி வரை வழிகாட்டி மதிப்பீடு ஒரு சதுர அடிக்கு ரூ.46/- வீதம் முழுத்தொகையும் செலுத்தியவர்களுக்கு மட்டும் பத்திரம் பதிவு செய்து தரவும் நகரமன்ற தீர்மான 310 நாள் 30.04.2012-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசால் வழிகாட்டி மதிப்பீடு தொகைகள் தமிழகம் முழுவதும் குறைக்கப்பட்டுள்ள நிலையில் 19.06.2019 தேதி முதல் மேற்படி இடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.100/- என உள்ளதை 33 % வழிகாட்டி மதிப்பு குறைக்கப்பட்டு சதுர அடிக்கு ரூ.67/-என நிர்ணயித்து வரப்பெற்ற கடித்தினை நகரமன்ற தீர்மான எண்.638 நாள்.29.11.2019ல் ஒப்புதல் பெறப்பட்டது. இருப்பினும் தற்போது மேற்படி இடத்திற்கான வழிகாட்டி மதிப்பீடு ஒரு சதுர அடிக்கு ரூ.100/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி விவரங்களை மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு தொடர்ந்து இந்நகராட்சி அலுவலக பதிவேட்டில் உள்ள முகவரிக்கு பலஅறிவிப்பு கடிதங்கள் வழங்கியும், இதுநாள் வரை நகராட்சியினை அணுகி பத்திர பதிவு செய்ய முன்வரவில்லை மேலும் ஒரு சில மனை ஒதுக்கீட்டாளர்கள் மனை ஒதுக்கீடு பெறப்பட்டு அன்றைய தேதியில் ஒரு சதுரஅடிக்கு ரூ.10.70/- வீதம் செலுத்தப்பட்டவர்கள் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கில் பிரதிவாதி சாதகமாக தீர்ப்பு பெற்று வந்து பத்திரபதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை தெளிவுரை கோரியதற்கு ஏற்கனவே மனை ஒதுக்கீடு செய்யப்பட்டு அன்றைய தேதியில் ஒரு சதுரஅடிக்கு ரூ.10.70/- வீதம் முழுதொகை செலுத்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே மாண்பமை சென்னை உயர்நிதி மன்றத்தில் பெறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் பத்திர பதிவு செய்து தருமாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் காவனூர் வீட்டுமனைகள் மேம்பாட்டு திட்டம் விரைந்து முடித்திட கீழ்காணும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) மனை ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே ஒரு சதுரஅடிக்கு ரூ.10.70/- வீதம் மனைக்கான முழுதொகையும் செலுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். 24538/2010 நாள் 19.07.2018-ன் தீர்ப்பு அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடி ந.க.எண்.16857/2021/டிபி-2 நாள் 18.08.2022ல் வழங்கப்பட்ட தெளிவுரையின் அடிப்படையிலும் பத்திர பதிவு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) காவனூர் வீட்டுமனைகள் மேம்பாட்டு திட்டத்தில் ஏற்கனவே 120 மனைகளுக்கு பத்திர பதிவு செய்து வழங்கியது போக மீதமுள்ள 361 மனைகளில் முழுதொகையும் செலுத்தாத பயனாளிகளில் தற்போது நகராட்சியினை அணுகி வரும் மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு தற்போதைய நடப்பு வழிகாட்டி மதிப்பீடு தொகையான ஒரு சதுர அடிக்கு ரூ.100/- வீதம் கணக்கீடு செய்து வசூலித்துக்கொண்டு பத்திர பதிவு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

இ) காவனூர் வீட்டுமனைகள் மேம்பாட்டு திட்டத்திற்கான பதிவேட்டில் உள்ள பயனாளிகளின் முகவரிக்கு பலமுறை அறிவிப்பு கடிதங்கள் வழங்கியும், இதுநாள் வரை நகராட்சியினை அணுகி பத்திர பதிவு செய்ய கொள்ள முன்வரவில்லை எனவே மீதமுள்ள 361 மனைகளை விரைந்து பத்திர பதிவு செய்து மேற்படி திட்டத்தினை முடிக்க ஏதுவாக மேற்படி பயனாளிகளுக்கு 30 நாட்களுக்கு கால அவகாசம் வழங்கி அதற்கான அறிவிப்பு கடிதங்கள் இந்நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் உள்ள முகவரிக்கு ஒப்புகை சீட்டுடன் அறிவிப்பு வழங்கவும், அவ்வறிவிப்பு கடித்தினை மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும், அற்கான செலவினத்தொகையினை IDSMT/வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மற்றும் மனை ஒதுக்கீட்டாளர்கள் 30 தினங்களுக்குள் பதிலளிக்க தவறும் பட்சத்தில் முன் அறிவிப்பு ஏதுமின்றி மேற்படி காவனூர் வீட்டுமனைகள் மேம்பாட்டு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளை மறுவிற்பனைக்கு கொணரப்படும் என அறிவிக்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஈ) மேற்படி இடத்தில் ஏற்கனவே பத்திரபதிவு செய்து வழங்கப்பட்டுள்ள 122 மனை ஒதுக்கீட்டாளர்கள் மனைப்பரிவில் அமைந்துள்ள தங்களின் மனைவிடத்தினை கண்டறிய இயலாத நிலையில் உள்ளது எனவும், அதனை முறையாக அளவீடு செய்து வழங்குமாறு கோரி வருகின்றனர். எனவே மேற்படி மனைப்பிரிவினை முழுவதுமாக சுத்தம் செய்து மனைப்பிரிவினை புதியதாக அளவீடு செய்து மனை கற்கள் பதிக்கவும் அற்கான செலவினத்தை IDSMT/வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு மேற்படி காவனூர் வீட்டுமனைகள் மேம்பாட்டு திட்டமானது தொடங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுநாள் வரை முடிவு பெறாமல் உள்ளதாலும், மனை ஒதுக்கீட்டாளர்களின் நலன் கருதியும், மற்றும் இந்நகராட்சியின் வருவாயினை கருதியும் அ முதல் ஈ வரை தெரிவித்துள்ள இனங்களுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.546** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 28</u>**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கடிதம் ந.க.எண்.648/2019/அ2 நாள் 26.06.2024-ல் இந்நகராட்சியின் ஆண்டு பங்கு தொகையாக (முதல் நிலை நகராட்சிக்கு) ரூ.75,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் படி 2024 -25 ஆம் ஆண்டிற்கான வருராய் அரக்கோணம் நகராட்சிக்கு பங்கு தொகை ரூ.75,000/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.547** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>சாதாரண கூட்ட எண் 32 எண். 12.07.2024</u>**

**<u>கூட்டத்தின் போது கொண்டு வரப்பட்ட மன்றப்பொருள்</u>**

**<u>நகரமன்ற தலைவர் திருமதி.லட்சுமி பாரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

**பொருள் எண்.29**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நடுநிலைப் பள்ளியில் தற்போது பள்ளி மேம்பாட்டு திட்டம் (SIG) 2023-24 ஆம் ஆண்டின் கீழ் பள்ளி கட்டிடம் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பணிகள் தொடங்கப்பட்டு தற்போது நடைபெற்று

வருகிறது. எனவே அங்கு இயங்கி வந்த உருது நகராட்சி ஆரம்ப பள்ளிக்கு போலாட்சியம்மன் நடுநிலைப் பள்ளியில் இடவசதி ஏதும் தற்போது இல்லை என்பதால் அப்பள்ளி தற்போது வேதாசலம் தெருவில் உள்ள ரஹமத் மன்ஸில் திருமண மண்டபத்தில் அவசர அவசியம் கருதி தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி பள்ளிக்கு போலாட்சியம்மன் நடுநிலைப் பள்ளியில் நகராட்சியின் சார்பில் சொந்த கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பள்ளிக்கு சொந்த கட்டடம் கட்டி முடியும் வரை வேதாசலம் தெருவில் உள்ள ரஹமத் மன்ஸில் திருமண மண்டபத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.6,000/– வாடகை வழங்கவும். அதற்கான செலவினத்தினை கல்விநிதியிலிருந்து வழங்கவும், தீர்மானம் நிறைவேற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.548** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.30**

**25வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.துரைசீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.**

சமீபத்தில் நடைபெற்ற இந்திய பாராளுமன்ற தேர்தலில் இந்தியாவே ஏன் உலக அரசியலேயே வியக்க வைக்கும் அளவிற்கு தமிழ்நாடு புதுச்சேரி உட்பட 40 மக்களவை தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணிக்கு அமோக வாக்குகள் மக்கள் அளித்து வெற்றி பெற செய்துள்ளார்கள்.

ஜனநாயகத்திற்க்கும் சமூக நீதிக்கும் நல்லாட்சி நடத்தி வரும் மக்களின் மனம் கவர்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத்திட்டங்கள் சரித்திர சாதனை திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கினார். தமிழ்நாடு மக்கள் தங்கள் முழு வழங்கியுள்ளார்கள். ஆதரவை பெருவாரியான வாக்குகள் மூலம்

முதல்வரின் செயல் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட மாண்புமிகு விளையாட்டு மற்றும் மேம்பாட்டு நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தொடர்ந்து நான்காவது முறையும் நமது தொகுதியில் திரு.டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களை பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிபெற கழக நிர்வாகிகளுக்கு ஆணையிட்ட மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் திரு.R. காந்தி அண்ணன் அவர்களுக்கும்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி 40 தொகுதிகளில் வாக்களித்து வெற்றி பெற செய்த பொது மக்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மாணம் கொண்டு வரும்படி கேட்டு கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.549** **நாள். 12.07.2024**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

(ஓம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.